www.tamilarangam.net

# கறுப்பு யூலை 1983 கறுப்பு யூலை 1983 கறுப்பு யூலை 1983

தமிழ் மக்களது பிரச்சனைகள் தொடர்பாக நோர்வேஜிய மக்களுடன் இணைந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தமிழர் ஆதரவுக்குழு ஒன்றை அமைப்பது என்று தமிழ் நோர்வே மக்கள் இணைவுகூடம் தீர்மானித்திருந்தது. இதற்காக ஒரு முன்னோடிக்குழு இணைவுகூடத்தினால் அமைக்கப்பட்டு ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இக்குழுவின் ஆரம்ப நடவடிக்கையாக 1983யூலை இனப்படுகொலையை நினைவுகூரும் நிகழ்வு ஒன்று நடத்தத் தீர்மானிக்கப்பட்டது. முன்னோடிக்குழுவினரால் கடந்த ஒகஸ்ற் 14ஆம் திகதி ஒஸ்லோவில் 'பத்துவருடக் கண்ணீர்' நிகழ்ச்சி நடத்தப்பட்டது. 1983 யூலையில் தமிழ் மக்கள்மீது இலங்கை அரசால் திட்டமிடப்பட்டு நடத்தப்பட்ட வன்முறைகளில் இருந்து இற்றைவரையிலான வரலாற்றையும் விளைவுகளையும் மீளாய்வதாய் இந்த நிகழ்வு அமைந்திருந்தது.

இந்நிகழ்ச்சிகள் 17.15க்கு ஆரம்பமாகின. திரு.ஆனந்தகிருஷ்ணன் அவர்கள் நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கும் பொறுப்பினை ஏற்றிருந்தார். அவர் தனது ஆரம்ப உரையில் உதவிக்குழுவி பற்றியும், இந்நிகழ்ச்சி பற்றியும் சிறு அறிமுகத்தை நிகழ்த்தினார். அவரைத் தொடர்ந்து பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட 'வென்ஸ்த்திர' கட்சியின் தலைவர் எய்னார் டோரும் (Einar Dørum) சிற்றுரையாற்றினார். அவர் தனதுரையில் *இன்று உலகில் பரந்துபட்டு வாழும் சிறுபான்மை இன மக்கள், பெரும்பான்மையினரால் ஒடுக்கப்பட்டு வருவதைச் சில உதாரணங்களுடன் குறிப்பிட்டார். மேலும் இலங்கை போன்ற மூன்றாம் உலக நாடுகளில் உள்ள பிரச்சனைகள், யூகோஸ்லாவியா போன்ற நாடுகளில் இருந்து வேறுபடுவதைக் குறிப்பிட்டார்.*

*இவ்வாறான நிலைமைகள் மிகச்சிக்கலும், கஷ்டத்திற்குரியதும் எனக் குறிப்பிட்ட அவர், இவற்றுக்கு ஒரு அரசியற் தீர்வு காண்பதே சிறந்தது எனக் குறிப்பிட்டார். சிலவேளை ராணுவ முறைகளை, அரசியற் தீர்வை அடைவதற்கான வழிவகைகளாகப் பாவிக்கலாமேயன்றி ராணுவத் தீர்வில் நம்பிக்கை வைக்கக்கூடாது என்றும் கூறினார்.*

*இந்தவகையில் முன்னோடிக்குழுவின் இந்த நிகழ்ச்சியும், ஓர் இடைக்காலத் தீர்விற்கான வேண்டுகோளும் துணிச்சலானதும் வரவேற்கப்பட வேண்டியதுமாகும்; இவ்வாறான முயற்சிகள் எப்போதும் வெற்றியளிக்கும் என்றில்லாதபோதும் இந்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டியவை* எனவும் கூறினார். தனதுரையின் இறுதியில் புகைப்படக் கண்காட்சியை அவர் சம்பிரதாயபூர்வமாகத் திறந்துவைத்தார்.

புகைப்படக் கண்காட்சியில் இலங்கையின் இனப்பிரச்சனை தொடர்பான புகைப்படங்கள் இடம்பிடித்திருந்தன. முக்கியமாக 83 இனக்கலவரத்திலிருந்து இன்றுவரையிலான துயர வரலாற்றை இந்தப் படங்கள் பிரதிபலித்தன. இவற்றிற்குரிய விளக்கம் நோர்வேஜிய மொழியில் எழுதப்பட்டிருந்தது.

புகைப்படக் கண்காட்சியைத் தொடர்ந்து 18.00மணியளவில் நிகழ்வுகள் ஆரம்பமாகின. நோர்வேஜிய மொழியிலான சிறு விளக்கத்துடன், 83யூலையில் வெலிக்கடையினுள் 53 தமிழ்ப் போராளிகள் படுகொலை செய்யப்பட்ட கோரநிகழ்வு 'சிறைக்கதவுகள்' என்ற தலைப்பில் நாடகமாக நிகழ்த்தப் பட்டது. தமயந்தியின் பிரதியினை ரவிகுமாரின் இசையில் விஜயேந்திரன் நெறிப்படுத்தியிருந்தார்.

தொடர்ந்து கலாநிதி சண்முகரத்தினம் அவர்கள் பத்துவருடகாலம் பற்றிய மேலோட்டமான கண்ணோட்டத்துடன் இன்று ஒரு இடைக்காலத் தீர்வின் அவசியத்தை வலியுறுத்திப் பேசினார். இடைக்காலத் தீர்விற்கான திட்டத்தை நிகழ்ச்சி அமைப்பாளர்களின் சார்பில் முன்வைத்த அவர் எமதுநாடு பற்றி அக்கறை கொண்டுள்ள நோர்வேஜிய அரசியல்வாதிகளையும், பொதுமக்களையும் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தி, ஜனநாயக ரீதியான தீர்வொன்றைக்காண எமது தலைவர்களை வழிநடத்துமாறு கேட்டார்.

அவரது உரையைத் தொடர்ந்து கவிதாநிகழ்வு இடம்பெற்றது. தமிழ்மக்களது துயரங்களையும், அமைதிக்கான நியாயமான முறையில் அமைந்த தீர்வுக்கான அவர்களது வேண்டுதலையும் கவிதைகள் பிரதிபலித்தன. யாழ் நூலகம் எரிக்கப்பட்டது பற்றிய சேரனது கவிதை ஒன்று, நோர்வேஜிய மொழியில் சிஸ்ரன் எக் (Kisten Eeg) அவர்களால் வாசிக்கப்பட்டது.

இடைவேளையின்பின் கலந்துரையாடலுடன் நிகழ்வுகள் ஆரம்பித்தன. இடைக்காலத் தீர்விற்கான திட்டம், பெண்கள் நிலை, அகதிகள் நிலை, இலங்கையிலுள்ள சமூகசேவை மற்றும் மனிதஉரிமை நிறுவனங்களது செயற்பாடுகள் போன்ற பல கேள்விகளுக்கு கலாநிதி சண்முகரத்தினம் பதிலளித்தார்.

இதையடுத்து நிகழ்ந்த ஒளிப்படக் காட்சி இலங்கை பற்றிய அழகிய படங்களுடன் ஆரம்பமாகித் தொடர்ந்து, இன்றைய யுத்தநிலைமைகள், அழிவுகள், அகதிகளாகியும் வறுமையிலும் வாடும் மக்களது துயரங்கள், சிறுவர்களது துன்பங்கள் என்பவற்றை வெளிப்படுத்தியது. நோர்வேஜிய மொழியில் இதற்கான விளக்க உரை நிகழ்த்தப்பட்டது. 20.30அளவில் நிகழ்ச்சிகள் நிறைவுற்றன.

இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்ட நோர்வேஜிய மக்கள் தமிழ் மக்களது துயரங்கள் தொடர்பாக ஆர்வத்துடன் கேட்டறிந்ததுடன் இவ்வாறான நிகழ்ச்சிகளின் அவசியத்தையும் வலியுறுத்தினர். இவ்வாறான நிகழ்ச்சிகள் தொடர்ந்து நிகழத் தமது ஆதரவை வழங்குவதாகவும் பலர் உறுதியளித்ததுடன், இலங்கையில் நிலவும் நிலைமைகள் சீராகி, மக்கள் சுமுகமாக வாழ்வதற்குரிய முன்னோடி முயற்சிகளில் தமது ஒத்துழைப்பையும் உறுதிப்படுத்தினர்.

www.tamilarangam.net

இந்நிகழ்ச்சியை நடத்த ஒத்துழைத்த அனைவரையும் முன்னோடிக்குழு நன்றியோடு நினைவுகூர்கிறது. இந்த முயற்சிக்கு பேர்கனில் இயங்கும் சகலகட்சிக்குழு தனது ஆதரவை வழங்கியிருந்தது. இவ்வாறான ஒத்துழைப்புடன் நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தமிழ் மக்களாகிய உங்கள் அனைவரதும் சகலவித ஒத்துழைப்பையும் முன்னோடிக்குழு எதிர்பார்க்கிறது. எதிர்காலத்திலும்

- முன்னோடிக்குழு -

Interimsstyre for støttegruppen
for fred på Sri Lanka,
Herslebs Gate 43,
0578 Oslo

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**'பத்துவருடக் கண்ணீர்' நிகழ்ச்சியில் ஆதரவுக் குழுவின் முன்னோட்டக் குழுவால், நோர்வே மக்களுக்கும் நோர்வே அரசியல்வாதிகளுக்கும் விடுக்கப்பட்ட வேண்டுகோளின் தமிழாக்கம்.**

இயற்கை எழிலுக்கும் அமைதிக்கும் பெயர்பெற்ற இலங்கை, கடந்த 10வருடங்களாக உள்நாட்டு யுத்தத்தாலும் மனிதவுரிமை மீறல்களாலும் பயங்கரமும் பலாத்காரமும் நிறைந்த தீவாக மாறியுள்ளது. தமிழ்- முஸ்லீம் மக்களின் பாரம்பரிய பிரதேசங்களான வடக்குக் கிழக்கில், விடுதலைப்புலிகளுக்கும் இலங்கையரசுக்கும் இடையில் மூண்டுள்ள போரால் மக்கள் அளப்பரிய துன்பங்களுக்கு உள்ளாவதுடன் பாரிய பொருட்சேதங்களும் ஏற்பட்டுவருகின்றன. யாழ்.பல்கலைக் கழகத்தின் பொருளியலாளர் ஒருவரது மதிப்பீட்டின்படி வட-கிழக்கின் சனத்தொகை 1987இல் 1.7மில்லியன்களாக இருந்து 1992இல் 900,000ஆக குறைந்துள்ளது. அதாவது இந்த 5வருடகால இடைவெளியில் 47%ஆல் வீழ்ச்சிபெற்றுள்ளது. தற்போது வட-கிழக்கில் இல்லாத 800,000 பேரில் 50,000பேர் இறந்துள்ளனர் அல்லது காணாமற் போயுள்ளனர். 350,000பேர் வெளிநாடுகளில் தஞ்சங் கோரியுள்ளனர். ஏனையோர் தென்னிலங்கையின் பல்வேறு பிரதேசங்களில் அகதிகளாக வாழ்கின்றனர். இடம்பெயர்ந்தோரில் தமிழர், முஸ்லீம்கள், சிங்களவர்கள் அடங்கினும், பெரும்பான்மையானோர் தமிழ் - முஸ்லீம்களேயாவர். முஸ்லீம்மக்களது இடப்பெயர்வு பெருமளவில் விடுதலைப் புலிகளது நிர்ப்பந்தத்தால் ஏற்படுத்தப்பட்டது. வடக்கு- கிழக்கு மக்களின் அத்தியாவசியச் செயற்பாடுகளாகிய விவசாயம், கடற்றொழில் என்பன தொடரும் யுத்தத்தால் ஸ்தம்பித நிலையிலுள்ளன. இத்துன்பங்களுடன் இலங்கையரசு வேறு தமிழர் வாழ் பிரதேசங்கள்மீது பொருளாதாரத் தடைகளை ஏற்படுத்தியுள்ளது. இப் பொருளாதாரத் தடைகளால் தமிழ்மக்கள் தமது அத்தியாவசியத் தேவைகளைப் பெறமுடியாத நிலையிலுள்ளனர். இலங்கையரசும் விடுதலைப்புலிகளும், இலங்கையின் இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வைத்தவிர வேறு வழியில்லை என்று கூறிக்கொள்ளினும் யுத்தம் முடிவுக்கு வரும் அறிகுறி ஏதும் தென்படுவதாகத் தெரியவில்லை. 1987இல் கொண்டுவரப்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தத்தால் இலங்கையின் தேசிய இனப்பிரச்சனை ஒரு முடிவுக்கு கொண்டுவரப்படும் என எதிர்பார்க்கப்பட்ட போதும் அதனால் பெருமளவு இழப்புகள் ஏற்பட்டதேயொழிய அமைதி கிட்டவில்லை. இதன் பின்னர் இலங்கையரசு அரைகுறைமனதுடன் பாராளுமன்றத் தெரிவுக்குழுவை நியமித்தது. இந்தத் தெரிவுக்குழுவால்கூட தமிழ் - முஸ்லீம் மக்களது நம்பிக்கையைப் பெறமுடியவில்லை. இவையெல்லாவற்றுக்கும் மாறாக ஆளும்கட்சியான ஐக்கியதேசியக்கட்சியும், பிரதம எதிர்க்கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் வடக்கு- கிழக்கு இணைப்பை எதிர்ப்பதில் மட்டும் அக்கறை காட்டினவேயன்றி அமைதிக்கு வழிகோலும் நடவடிக்கைகளில் தீவிரம் காட்டவில்லை. இந்த வடக்கு - கிழக்கு இணைப்பு எதிர்ப்பு வாதத்தின் மூலம் தமிழ்மக்களது அரசியல் பலத்தை இழக்கச்செய்வதே இவர்களது முக்கிய நோக்கமாக இருந்தது எனலாம். இத்தகைய போக்குகளால் 1956 முதல் இலங்கை எதிர்நோக்கிய தேசிய இனப்பிரச்சனைக்கு எந்தவகையிலும் தீர்வுகாண இயலாது.

மனித அழிவு, சமூகவாழ்வின் சீரழிவு, ஜனநாயக உரிமைகளது இழப்பு, பொருளாதார இழப்பு, வடக்கு - கிழக்கு அபிவிருத்தியின் ஸ்தம்பிதம் மாத்திரமன்றி, இலங்கையரசும் பாராமுகப் போக்கைக் கையாள்கின்றது. இந்நிலை நம்பிக்கையீனத்தை வளர்க்கலாம். இருப்பினும் நாட்டிலுள்ள மக்கள்மட்ட இயக்கங்களது நடவடிக்கைகளால் எதிர்காலத்தில் அமைதியும் சுபீட்சமும் கிடைக்கக்கூடிய அறிகுறிகள் தென்படுகின்றன.

பத்து வருடங்களாக இடம்பெற்றுவரும் உள்நாட்டு யுத்தம் தமிழ், முஸ்லீம், சிங்கள மக்களது சிந்தனைகளில் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன. அவர்கள் அமைதிக்கான தமது விருப்பை தம்மாலியன்ற வழிகளில் வெளிப்படுத்தி வருகின்றனர். இன்னும் கூறப்போனால் வடக்கு - கிழக்கில் இருந்து ஆயிரக்கணக்கில் குடிபெயர்ந்து இலங்கையின் தென்பகுதியில் தஞ்சங்கோரியிருப்பது இன்றைய மாறியநிலையின் வெளிப்பாடாகும். இலங்கையில் இராணுவமும் பொலீசாரும் தமிழ்மக்கள்மீது வெறுப்புடையவர்களாக இருக்கும் போதும், சாதாரண சிங்களமக்கள் இத்தகைய போக்கைக் கொண்டிருக்கவில்லை. வடக்கு - கிழக்கு தமிழர்களது முக்கிய அவா, தமது கௌரவத்தை அங்கீகரிக்கும் சமாதானமாகும். யுத்தத்தை முற்றாக ஒழித்து ஜனநாயகத்துக்கு வழிவகுக்கும் தீர்வுக்கான பாதையை முன்னெடுக்கும் இடைக்காலத் தீர்வே இன்றைய தேவையாகும். இருப்பினும் இலங்கையரசும் விடுதலைப்புலிகளும் பேச்சுவார்த்தைக்கென ஏனைய தமிழ், சிங்கள, முஸ்லீம் கட்சிகளுடன் ஒரு சமாதானப் போக்கைக் கடைப்பிடிக்காதவரை போரை நிறுத்துவதற்கான வேறு சாத்தியக்கூறுகளில்லை. சமாதானத்துக்கு வழிவகுக்கக்கூடிய நடுநிலமையாளர் ஒருவர், இன்றைய இலங்கையின் சமாதானத்துக்குத் தேவையாகவுள்ளது. இத்தகைய பணியைச் செய்யக்கூடிய ஐரோப்பிய நாடுகளில் நோர்வேயும் ஒன்று என நாம் கருதுகின்றோம். ஒரு இடைக்காலத் தீர்வே நமது உடனடி நோக்கமாகும். இராணுவ நிர்மயமாக்கலுடன், ஜனநாயகமயமாக்கலுக்கு அரசியல் சூழலை ஏற்படுத்தவல்ல இடைக்காலத் தீர்வே எமது நோக்கமாகும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ல

**முன்நிபந்தனைகள்:**

1. காலவரையறையற்ற யுத்தநிறுத்தம்.
2. வடக்கிலுள்ள பொருளாதாரத் தடையை நீக்கல்.
3. இடம்பெயர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களுக்குச் சென்று மீளவும் வாழ வழியமைத்தல்.
4. திட்டமிட்ட குடியேற்றங்களை உடனடியாக நிறுத்துதல்.

**இடைக்காலத் திட்டத்தின் முக்கிய அம்சங்கள்:-**

1. பிராந்தியஅரசு அல்லது மாகாணசபைகளுக்கு ஊடாக தமிழ்- முஸ்லீம் மக்களது அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக்கூடியவகையில் அதிகாரப் பரவலாக்கம்.

2. இந்த பிராந்தியஅரசோ அல்லது மாகாணசபைகளோ வடக்கு - கிழக்கின் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளவும் அங்குவாழும் சமூகங்களது கலை, கலாச்சாரங்களைப் பேணவும் சுயாதிபத்தியத்தைக் கொண்டிருக்க வேண்டும். வடக்கு - கிழக்கில் வாழும் சிங்கள சிறுபான்மை இனத்தவர்கள், தெற்கில் வாழும் தமிழ் - முஸ்லீம் மக்கள் கொண்டிருக்கும் உரிமைகளைக் கொண்டிருப்பதற்கான உத்தரவாதம் அளிக்கப்பட வேண்டும்.

2. இராணுவ நிர்மயமாக்கல், அதிகாரப் பரவலாக்கம், பாராளுமன்ற ஜனநாயகத்தின் மீளமைப்பு என்பவற்றுக்கு சகல தரப்பினரும் தமது உறுதியான ஆதரவை வழங்க முன்வரவேண்டும்.

3. வடக்கு- கிழக்கின் பொருளாதார, சூழலை புனருத்தாரணம் செய்யும் வகையில் அப்பிரதேசத்தின் பொருளாதார, சூழல் பாதிப்புகள்பற்றிய மதிப்பீடு செய்யப்படல்.

4. யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களது பொருளாதார, வாழ்வுக்கான புனர்வாழ்வுத் திட்டங்கள் ஏற்படுத்தப்படல்.

5. வடக்கு - கிழக்கின் சமுகங்களது பொருளாதார புனர்நிர்மாணத்துக்கு வழிவகுக்கும் வகையில் தமிழ் இளைஞர்களை மீளிணைக்கும் திட்டங்கள் மேற்கொள்ளப்படல்.

இலங்கையில் அமைதிக்கும் நீதிக்கும் நடுநிலமை வகித்தல் என்பது சவாலான ஒரு விடயந்தான். மேற்குறிப்பிட்ட நிபந்தனைகளைத் திருப்தி செய்வதற்கு திறமையும் காலமும் தேவை. அத்துடன் நடுநிலமை வகிப்பும் கண்காணிப்பும் அவசியம். நலநிலமையாளர் இலங்கையரசினதும் விடுதலைப்புலிகளதும் ஏனைய அமைப்புகளதும் நம்பிக்கையைப் பெறக்கூடிய தராதரத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். எமது கருத்துப்படி நோர்வே இந்த தகைமையைக் கொண்டுள்ளது. நோர்வேஜிய அரசியல்வாதிகளைக் கொண்ட ஒரு குழுவால் இலங்கையின் இனப்பிரச்சனைக்கு ஒரு சமாதான முயற்சியை முன்னெடுக்க முடியுமானால் அதுவே ஒரு வெற்றியாகும். ஆகவே நோர்வே அரசியல்வாதிகளும் அமைதி நடவடிக்கையாளர்களும் இலங்கை இனப்பிரச்சனையில் அக்கறைகாட்ட வேண்டும் எனக் கோருகின்றோம். அத்துடன் இலங்கை இனப்பிரச்சனையில் அக்கறை கொண்டுள்ள நோர்வே மக்களும் சமாதான விரும்பிகளும் இந்த உதவிக்குழுவுடன் இணைந்து தம்மாலான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் வேண்டிக் கொள்கின்றோம்.

ஓகஸ்ற் 14, 1993,
ஒஸ்லோ, நோர்வே.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்